**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

**2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் கீழ் 2020ஆம் ஆண்டின் 9ஆம் இலக்கப் பணிப்புரைகள்**

---

**சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட பணிப்புரைகள்**

2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிடப்பட்ட 2170/4 இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள், அதன் பின்னர் 2020 யூலை 01ஆம் திகதியிடப்பட்ட 2182/32 இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட மற்றும் 2020 ஒத்தோபர் 06ஆம் திகதியிடப்பட்ட 2196/22 இலக்க வர்த்தமானி (அதிவிசேடம்) அறிவித்தலில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகள் மற்றும் 2017ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 9ஆம் பிரிவு என்பனவற்றின் நியதிகளில், சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர்பில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு விடுக்கப்பட்ட 2020 யூலை 06ஆம் திகதியிடப்பட்ட 2020ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட பற்றுகளுக்குப் புறம்பாக, பின்வரும் பற்றுக்களுக்கு வசதியளிப்பதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகிறது. மேலும், அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் 2020இன் 06ஆம் இலக்கப் பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்குப் புறம்பாக, இப்பணிப்புரைகளில் 3ஆம் பந்தியின் கீழ் உள்ள நிபந்தனைகளுக்கு இணங்கியொழுகுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**2. அனுமதிக்கப்பட்ட பற்றுகள்**

(அ) அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர் 2017 நவெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட 2045/56 இலக்க வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 02ஆம் இலக்க (மூலதன கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்ற நோக்கத்திற்காக கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில், உள்முக முதலீட்டுக் கணக்கொன்றினைத் திறந்து பேணப்படுவதற்குத் தகைமையுடையவராக இருத்தல் வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு அதேகணக்கு உடமையாளரின் உள்முக முதலீட்டுக் கணக்கிற்கு சிறப்பு வைப்புக் கணக்கின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளின் மாற்றல்.

(ஆ) அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு உடமையாளர் 2017 நவெம்பர் 17ஆம் திகதியிடப்பட்ட 2045/56 இலக்க வர்த்தமானியில் (அதிவிசேடம்) வெளியிடப்பட்ட 2017ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க (வெளிநாட்டுச் செலாவணிக் கணக்குகளைத் திறந்து பேணிவருதல்) ஒழுங்குவிதிகளின் நியதிகளில் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகளைப் பேணுவதற்குத் தகைமையுடையவராக இருக்குமிடத்து, சிறப்பு வைப்புக் கணக்குகளின் வட்டி உட்பட முதிர்ச்சிப் பெறுகைகளை அதேகணக்கு உடமையாளரின் தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கு மாற்றல்.

**3. ஏனைய நிபந்தனைகள் :**

(அ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் ஒழுங்குவிதிகளின் கீழ் திறக்கப்பட்ட சிறப்பு வைப்புக் கணக்குகளை “சிறப்பு வைப்புக் கணக்கு” என்ற பெயரில் அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு முதிர்ச்சியடையும் திகதிக்கு அப்பாலும் சாதாரணமான தவணை வைப்புக்களாக உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவில் பேணி வரலாம். முதிர்ச்சிகளுக்கு அப்பால் அவ்வாறு பேணப்படுகின்ற சிறப்பு வைப்புக் கணக்குகளுக்கு அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மற்றைய தவணை வைப்புக்களைப் போன்று வழமையான வைப்புகளுக்கான வட்டி வீதங்களையே வழங்குதல் வேண்டும்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், சிறப்பு வைப்புக் கணக்கு தொடர்பான ஆவணச் சான்றுகளைச் சட்டரீதியாக பதிவேடுகளைப் பேண வேண்டிய காலத்திற்கு அப்பாலும் அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்கு மூடப்படும் வரையும் பேணுதல் வேண்டும்.

**4. அறிக்கையிடுகின்ற தேவைப்பாடு**

(அ) அதிகாரமளிக்கப்பட்டுள்ள வணிகர்கள், 2020 ஒத்தோபர் மாதத்திலிருந்து நடைமுறைக்குவரும் விதத்தில் இப்பணிப்புரைகளின் இணைப்பு 1இல் தரப்பட்டுள்ளவாறான படிவத்திற்கமைய அடுத்துவரும் மாதத்தின் 15ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ dfem@cbsl.lk என்ற மின்னஞ்சல் ஊடாக இத்திணைக்களத்திற்கு மாதாந்த அடிப்படையில் தகவல்களை சமா்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனா்.

(ஆ) அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள், சிறப்பு வைப்புக் கணக்கு தொடர்பான 2020ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க பணிப்புரைகளின் பந்தி 9(ஈ)இற்கிணங்க அத்தகைய சிறப்பு வைப்புக் கணக்குகள் தொடர வேண்டியிருக்குமிடத்து, அத்தகைய பணிப்புரையின் இணைப்பு 2இல் கேட்டுக்கொள்ளப்பட்டவாறான தகவல்களைத் தொடா்ந்தும் அறிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனா்.

**மேலதிகப் பணிப்பாளர்**
**வெளிநாட்டுச் செலாவணித் திணைக்களம்**
**07.10.2020**

**சாதாரண தவணை வைப்பாகத் தொடர்ந்தும் தொழிற்படுவதற்கான சிறப்பு வைப்புக் கணக்குகளின் மாதாந்தக் கூற்று** **இணைப்பு I**

**வங்கியின் பெயர் ………………………**

**அறிக்கையிடும் மாதம் மற்றும் ஆண்டு …....................** 000’

| நாணயத்தின் வகை* | மாதத்தின் தொடக்கத்திலுள்ளவாறு கணக்குகளின் எண்ணிக்கை | மாதத்தின் தொடக்கத்திலுள்ளவாறு மீதி | மாத காலப்பகுதியில் வழமையான கால வைப்பாகத் தொழிற்பட வேண்டிய சிறப்பு வைப்புக் கணக்குகள் | | பற்றுகள் | | | | | மாத இறுதியிலுள்ள மீதி | மாத இறுதியிலுள்ள கணக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கணக்குகளின் இல. | தொகை | இலங்கையில் எடுப்பனவுகள் | வெளிமுக பணவலுப்பல்கள் | பின்வருவனவற்றுக்கான மாற்றல்கள் | | | | |
| | | | | | | | உள்முக முதலீட்டுக் கணக்குகள் | தனியாள் வெளிநாட்டு நாணயக் கணக்குகள் | கடல்கடந்த வங்கித்தொழில் பிரிவிலுள்ள கணக்கு | | |
| ஐ.அ.டொலர் | | | | | | | | | | | |
| யூரோ | | | | | | | | | | | |
| இல.ரூபா | | | | | | | | | | | |

* ஏனைய குறித்துரைக்கப்பட்ட நாணயங்களுக்கு ஏற்ப நிரல்களை விரிவுபடுத்தவும்.

அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் மேலேயுள்ளவாறு அறிக்கையின் ஸ்கான் செய்யப்பட்ட பிரதி, மற்றும் எம்எஸ் எக்ஸல் பதிப்பு ஆகிய இரண்டையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

வங்கியின் கணக்கேட்டிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட/ தயாரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட தகவல்கள் துல்லியமானவை என்பதனை நாம் உறுதிப்படுத்துகின்றோம்.

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் பெயர் :

கையொப்பம் :

திகதி :

இணங்குவிப்பு அலுவலரின் பெயர் மற்றும் முத்திரை:

கையொப்பம் :

திகதி :